# அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், சமயபுரம் , திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

**ந.க.எண். 46/1431/அ2. நாள். 06.07.2021**

## வேலை வாய்ப்பு அறிவிப்பு

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மண்ணச்சநல்லூர் வட்டம், சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் மற்றும் அதன் உபகோயில்களில் காலியாக உள்ள கீழ்க்காணும் பணியிடங்களுக்கு பணியாளர்களை நியமனம் செய்ய 01.07.2021 அன்று 18 வயது பூர்த்தியடைந்த 35 வயதுக்குட்பட்ட, இந்து மதத்தை சார்ந்த தகுதியுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 07.08.2021 மாலை 05.00 மணி

**விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி :**

இணை ஆணையர் / செயல் அலுவலர், அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், சமயபுரம், மண்ணச்சநல்லூர் வட்டம், திருச்சிராப்பள்ளி மாவட்டம். அ.கு.எண் – 621 112

| வ. எண் | பணியிடத்தின் பெயர் | ஊதிய விகிதம் | காலிப் பணியிடங்கள் எண்ணிக்கை | கல்வித் தகுதிகள் |
|---|---|---|---|---|
| **முதன்மை திருக்கோயில் – அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், சமயபுரம்** | | | | |
| 1. | இளநிலை உதவியாளர் | ரூ.18500–58600 | 4 | SSLC தேர்வில் தேர்ச்சி அல்லது அரசால் அங்கீகரிக்கப்பட்ட அதற்கு சமமான தகுதி |
| 2. | தட்டச்சர் | ரூ.18500–58600 | 1 | 1. SSLC தேர்வில் தேர்ச்சி அல்லது அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் அதற்கு சமமான தகுதி.<br>2. அரசு தொழில் நுட்ப தேர்வில் தட்டச்சு தேர்ச்சி.<br>(i )தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் உயர்நிலை<br>(ii ) தமிழில் உயர்நிலை மற்றும் ஆங்கிலத்தில் கீழ்நிலை அல்லது<br>(iii ) ஆங்கிலத்தில் உயர்நிலை மற்றும் தமிழில் கீழ்நிலை<br>3. அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் மூலம் Computer Application and office Automation சான்றிதழ் பயிற்சியில் தேர்ச்சி அல்லது அதற்கு சமமான தகுதி |
| 3. | சீருந்து ஓட்டுநர் | ரூ.18500–58600 | 1 | 1) எட்டாம் வகுப்பு தேர்ச்சி அல்லது அதற்கு இணையான கல்வி தகுதி<br>2) இலகு ரக அல்லது கனரக வாகன ஓட்டுநர் உரிமம் மற்றும் முதலுதவி சான்று<br>3) ஓராண்டு ஓட்டுநர் அனுபவம் |
| 4. | பம்ப் டிரைவர் | ரூ.16600– 52400 | 1 | அரசு அல்லது அரசு அங்கீகாரம் பெற்ற தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்தில் ( I.T.I ) certificate in Plumber trade பயிற்சி பெற்ற சான்று பெற்றிருக்க வேண்டும்.<br>குறிப்பிட்ட பணியில் ஐந்து ஆண்டு அனுபவம் அல்லது 2 ஆண்டு பயிலுனர் தகுதி சான்று |
| 5. | மின் விசை உதவியாளர் | ரூ.16600 – 52400 | 1 | 1) அரசு அல்லது அரசு அங்கீகாரம் பெற்ற தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்தில்( I.T.I ) certificate in Electrical / Wireman Trade பயிற்சி பெற்ற சான்று பெற்றிருக்க வேண்டும்.<br>2) Electrical Licensing Board -லிருந்து H தர சான்று பெற்றிருக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| 6. | காவலர் / சீட்டு விற்பனையாளர் | ரூ.15900–50400 | 4 | எட்டாம் வகுப்பு தேர்ச்சி அல்லது அரசால் அங்கீகரிக்கப்பட்ட அதற்கு சமமான தகுதி |
| 7. | கருணை இல்ல சமையலர் | ரூ.15900–50400 | 1 | தமிழில் எழுத, படிக்க தெரிந்திருத்தல் வேண்டும். |
| 8. | ஓதுவார் | ரூ.18500–58600 | 1 | 1) தமிழில் எழுத, படிக்க தெரிந்திருத்தல் வேண்டும்.<br>2) சமய நிறுவனங்கள் அல்லது அரசால் நடத்தப்படும் தேவாரம் பாட சாலையில் 3 ஆண்டுகள் சான்றிதழ் பயிற்சியில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். |
| 9. | தவில் | **ரூ.18500–58600 *** | 1 | 1) தமிழில் எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும்.<br>2) அரசு / அரசு அங்கீகாரம் பெற்ற / சமய நிறுவனங்கள் நடத்தும் இசை பள்ளியிலோ 3 ஆண்டுகள் சான்றிதழ் பயிற்சியில் ( தவில் ) தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். |
| 10. | நட்டுவம் | ரூ.15700–50000 | 1 | 1) தமிழில் எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும்.<br>2) அரசு / அரசு அங்கீகாரம் பெற்ற / சமய நிறுவனங்கள் நடத்தும் இசை பள்ளியிலோ 3 ஆண்டுகள் சான்றிதழ் பயிற்சியில் (நட்டுவம்) தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். |
| **அருள்மிகு ஆதிமாரியம்மன் திருக்கோயில், இனாம் சமயபுரம்** | | | | |
| 11. | சீட்டு விற்பனையாளர் | ரூ.11600–36800 | 1 | எட்டாம் வகுப்பு தேர்ச்சி அல்லது அரசால் அங்கீகரிக்கப்பட்ட அதற்கு சமமான தகுதி |
| 12. | காவலர் | ரூ.11600–36800 | 1 | தமிழில் எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும். |
| 13. | இரவு காவலர் | ரூ.11600–36800 | 1 | தமிழில் எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும். |
| **அருள்மிகு உஜ்ஜயினி ஓம் காளியம்மன் திருக்கோயில், மாகாளிகுடி** | | | | |
| 14. | சீட்டு விற்பனையாளர் | ரூ.11600–36800 | 1 | எட்டாம் வகுப்பு தேர்ச்சி அல்லது அரசால் அங்கீகரிக்கப்பட்ட அதற்கு சமமான தகுதி |
| 15. | காவலர் | ரூ.11600–36800 | 1 | தமிழில் எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும். |
| **அருள்மிகு போஜீஸ்வரர் திருக்கோயில், சமயபுரம்** | | | | |
| 16. | காவலர் | ரூ.11600–36800 | 1 | தமிழில் எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும். |
| 17. | இரவு காவலர் | ரூ.11600–36800 | 1 | தமிழில் எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும். |
| 18. | திருச்சுற்று | ரூ.10000–31500 | 1 | தமிழில் எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும். |
| **அருள்மிகு முக்தீஸ்வரர் திருக்கோயில், மாகாளிகுடி** | | | | |
| 19. | காவலர் | ரூ.11600–36800 | 1 | தமிழில் எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும். |
| 20. | இரவு காவலர் | ரூ.11600–36800 | 1 | தமிழில் எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும். |
| 21. | திருச்சுற்று | ரூ.10000–31500 | 1 | தமிழில் எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும். |
| **அருள்மிகு செல்லாண்டியம்மன் திருக்கோயில், சமயபுரம்** | | | | |
| 22. | காவலர் | ரூ.11600–36800 | 1 | தமிழில் எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும். |
| 23. | இரவு காவலர் | ரூ.11600–36800 | 1 | தமிழில் எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும். |

குறிப்பு ***07.07.2021.ம் தேதிய தினத்தந்தி திருச்சி பதிப்பு நாளிதழ் விளம்பரத்தில் தவில் பணியிடத்திற்கான ஊதிய விகிதம் ரூ.15900 – 50400 என குறிப்பிடப்பட்டிருந்தது. தற்போது அரசாணை எண். 35 / சுற்றுலா, மற்றும் அறநிலையங்கள் (RE4-2) துறை /நாள்.03.02.2020.ன்படி தவில் பதவிக்கான ஊதிய விகிதம் ரூ.18500 – 58600 என திருத்தி அறிவிப்பு வெளியிடப்படுகிறது.**

**<u>சமயபுரம், அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் மற்றும் அதன் உபகோயில்களில் உள்ள அர்ச்சகர் மற்றும் உதவி அர்ச்சகர் பணி நியமனம் குறித்த அறிவிப்பு</u>**

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 09.08.2021 மாலை 05.00 மணி

**விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி :**

இணை ஆணையர் / செயல் அலுவலர், அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், சமயபுரம், மண்ணச்சநல்லூர் வட்டம், திருச்சிராப்பள்ளி மாவட்டம். அஞ்சல் குறியீட்டு எண் – 621 112

<table>
<tr><th>வ. எண்</th><th>பணியிடத்தின் பெயர்</th><th>ஊதிய விகிதம்</th><th>காலிப் பணியிடங்கள் எண்ணிக்கை</th><th>கல்வித் தகுதிகள்</th></tr>
<tr><td colspan="4">அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், சமயபுரம்</td><td rowspan="9">1) தமிழில் எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும்.<br>2) ஏதேனும் ஒரு மத நிறுவனம் அல்லது வேறு நிறுவனத்தால் நடத்தப்படும் ஆகம பயிற்சி பள்ளியில் ஓராண்டு சான்றிதழ் பயிற்சியில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.</td></tr>
<tr><td>1.</td><td>உதவி அர்ச்சகர்</td><td>ரூ.11600–36800</td><td>3</td></tr>
<tr><td colspan="4">அருள்மிகு ஆதிமாரியம்மன் திருக்கோயில், இனாம் சமயபுரம் ( உபகோயில் )</td></tr>
<tr><td>2.</td><td>அர்ச்சகர்</td><td>ரூ.11600–36800</td><td>2</td></tr>
<tr><td colspan="4">அருள்மிகு உஜ்ஜயினி ஓம்காளியம்மன் திருக்கோயில், மாகாளிகுடி ( உபகோயில் )</td></tr>
<tr><td>3.</td><td>அர்ச்சகர்</td><td>ரூ.11600–36800</td><td>1</td></tr>
<tr><td colspan="4">அருள்மிகு முக்தீஸ்வரர் திருக்கோயில், மாகாளிகுடி ( உபகோயில் )</td></tr>
<tr><td>4.</td><td>அர்ச்சகர்</td><td>ரூ.11600–36800</td><td>1</td></tr>
</table>

## பொது விபரங்கள்

1. இந்து மதத்தைச் சேர்ந்தவர்கள் மட்டும் விண்ணப்பிக்க வேண்டும்.
2. மேற்கண்ட பணியிடங்களுக்கு விண்ணப்பிப்பவர்கள் நன்கு ஆரோக்கியமான உடல் நிலையுடன், தீயபழக்க வழக்கங்கள் மற்றும் தொற்று நோயற்றவர் என்றும், நல்ல மனநிலை உடையவர் என்பதற்கான விபரங்கள் குறிப்பிட்டு மருத்துவர் சான்றுடன் விண்ணப்பிக்க வேண்டும்.
3. 01.07.2021 அன்று 18 வயது பூர்த்தி அடைந்தவர்களாகவும், 35 வயதிற்கு உட்பட்டவர்கள் மட்டும் விண்ணப்பிக்க வேண்டும்.
4. நீதிமன்றத்தில் தண்டனை பெற்றவர்கள், குற்ற நடவடிக்கைகளில் சம்பந்தப்பட்டவர்கள் ஜாமீனில் கட்டுப்படுத்தப்பட்டவர்கள், திருக்கோயிலுக்கு எதிராக வழக்கு தொடர்ந்தவர்கள், அரசு மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்கள், உள்ளாட்சி அமைப்புகள், எவ்வித அறநிறுவனத்திலிருந்து நீக்கப்பட்டவர்கள் / விலக்கப்பட்டவர்கள், தீர்ப்பு கடனாளிகள் ஆகியோர் விண்ணப்பிக்க தகுதியற்றவர்கள்.
5. பணி நியமனம் அரசாணை எண்.114/சுற்றுலா, மற்றும் அறநிலையங்கள் (RE4-2) துறை / நாள்.04.09.2020 மூலம் வெளியிடப்பட்ட தமிழ்நாடு இந்து சமய அறநிலையங்கள் பணியாளர்கள் (Conditions of Service) விதிகளின் படியானது. இந்த அரசாணையை இந்த அறிவிப்பின் பகுதியாக அறிந்து கொள்ளவும்.
(http://www.stationeryprinting.tn.gov.in/extraordinary/2020/362_Ex_III_1a.pdf என்னும் இணைப்பில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்)
TOURISM, CULTURE AND RELIGIOUS ENDOWMENTS DEPARTMENT THE TAMIL NADU HINDU RELIGIOUS INSTITUTIONS EMPLOYEES (CONDITIONS OF SERVICE) RULES, 2020.
[G.O.Ms.No.114, Tourism, Culture And Religious Endowments (RE4-2), 3rd September 2020, Aavani 18, Saarvari, திருவள்ளுவர் ஆண்டு - 2051.]

6. இந்த பணி நியமன நடவடிக்கை அனைத்தும் ஏற்கனவே நடைமுறையில் உள்ள 1959.ம் வருடத்திய இந்து சமயம் மற்றும் அறக் கட்டளைகள் சட்டம் மற்றும் அதன் கீழ் ஏற்படுத்தப்பட்ட விதிகள், அரசாணைகள், சுற்றறிக்கைகள் மற்றும் நீதிமன்ற உத்திரவுகளுக்கும் கட்டுப்பட்டதாகும்.
7. எந்தவொரு மத நிறுவனம் மற்றும் அறக்கட்டளையின் நலனுக்கு எதிரானவர்கள், எந்தவொரு வகையிலும் பாக்கி வைத்துள்ளவர்கள் விண்ணப்பிக்க தகுதி அற்றவர்கள்.
8. திருக்கோயில் அலுவலகம் மூலம் வெளியிடப்பட்ட விண்ணப்ப படிவத்தில் மட்டுமே A4 சைஸ் பூர்த்தி செய்து விண்ணப்பிக்க வேண்டும். ஒவ்வொரு பணியிடத்திற்கும் தனித்தனியே விண்ணப்பிக்க வேண்டும்.
9. நிர்ணயிக்கப்பட்ட காலக் கெடுவிற்குள் பெறப்படும் விண்ணப்பங்கள் மட்டும் பரிசீலனைக்கு ஏற்றுக் கொள்ளப்படும்.
10. விபரங்கள் முழுமையாக பூர்த்தி செய்யப்படாமலும், கேட்கப்பட்ட சான்றுகள் இணைக்கப்படாமலும், உரிய கல்வி மற்றும் வயது தகுதிகள் இல்லாத விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. இணைக்கப்படும் சான்றுகளில் அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர் சான்றொப்பம் பெற்று அனுப்பப்பட வேண்டும்.
11. விண்ணப்பங்களை பரிசீலித்து தகுதியான நபர்களுக்கு மட்டுமே நேர்காணலுக்கு அழைப்பு அனுப்பப்படும். நேர்காணலுக்கு விண்ணப்பதாரர்கள் குறிப்பிட்ட நாளில் / நேரத்தில் தனது சொந்த செலவின் / பொறுப்பில் அனைத்து அசல் சான்றுகளுடனும் ஆஜராக வேண்டும். எவ்வித காலதாமதமோ / காரணங்களோ ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
12. விண்ணப்பதாரர்களால் வழங்கப்படும் சான்றுகள் அனைத்தும் சம்பந்தப்பட்ட துறைகளின் பரிசீலனைக்கு உட்படுத்தப்படும்.
13. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை உரிய சான்றுகளுடன் அஞ்சல் உறையில் எந்த பணியிடத்திற்கான விண்ணப்பம் என்பதை தெளிவாக குறிப்பிட்டு இணை ஆணையர் / செயல் அலுவலர், அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், சமயபுரம் , திருச்சிராப்பள்ளி மாவட்டம் –621 112 என்ற முகவரிக்கு நேரிலோ / அஞ்சல் மூலமாகவோ அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பத்துடன் ரூ.25/– அஞ்சல் வில்லை ஒட்டப்பட்ட, சுயவிலாசமிட்ட ஒப்புதல் அட்டையுடன் கூடிய உறை இணைக்கப்பட வேண்டும்.
14. விண்ணப்பதாரர் தான் வசிக்கும் பகுதிக்கு உட்பட்ட காவல் நிலையத்தில் தன் மீது எந்த ஒரு குற்ற வழக்கும் நிலுவை இல்லை என்பதற்கான சான்றினை விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்க வேண்டும்.
15. விண்ணப்பதாரர் தமிழ்நாடு இந்து சமய அறநிலையத்துறை சட்ட விதிகளுக்கு உட்பட்டும், திருக்கோயிலில் தொன்று தொட்டு கடைபிடிக்கப்படும் பழக்க வழக்கங்கள், நடைமுறைகள் மற்றும் திருக்கோயில் நிர்வாகத்தினால் அவ்வப்போது பிறப்பிக்கப்படுகின்ற உத்தரவுகளுக்கு கட்டுப்பட்டும் பணிபுரிய கடமைப் பட்டவர்கள்.
16. விண்ணப்பதாரரால் தெரிவிக்கப்பட்ட விபரங்கள் அனைத்தும் சரியானவை என உறுதி அளிக்க வேண்டும். தவறான தகவல்கள் அல்லது போலியான ஆவணங்கள் ஏதேனும் அளித்து பணி நியமன ஆணை பெறப்படும் பட்சத்தில், எவ்வித முன்னறிவிப்புமின்றி பணி நீக்கம் செய்தும், சட்ட ரீதியான நடவடிக்கைகளுக்கும் உட்படுத்தப்படுவர்.
17. விண்ணப்பத்துடன் கீழ்கண்ட சான்றிதழ்களை வரிசையாக இணைத்து அனுப்ப கேட்டுக் கொள்ளப்படுகிறது.
    1) விண்ணப்பத்தில் பாஸ்போர்ட் சைஸ் புகைப்படம் ஒட்டப்பட வேண்டும்.
    2) முகவரி சான்று நகல் இணைக்கப்படவேண்டும்.
    3) பிறந்த நாள் குறித்த சான்று இணைக்கப்பட வேண்டும்.
    4) சாதி சான்று நகல் இணைக்கப்பட வேண்டும்.
    5) கல்வி தகுதிக்கான சான்றுகளின் நகல்கள் இணைக்கப்பட வேண்டும்.
    6) பதிவு பெற்ற மருத்துவரிடமிருந்து பெறப்பட்ட உடற்தகுதி சான்று இணைக்கப்பட வேண்டும்.
    7) குற்ற வழக்கு ஏதும் இல்லை என்பதற்கான காவல்துறை சான்று இணைக்கப்பட வேண்டும்.

8) A அல்லது B கிரேடு அலுவலர்கள் இருவரிடமிருந்து பெறப்பட்ட இரண்டு நன்னடைத்தை சான்றுகள் இணைக்கப்பட வேண்டும்.
9) முன் அனுபவ சான்று இணைக்கப்பட வேண்டும்.
10) வாக்காளர் / ஆதார் அட்டை நகல் இணைக்கப்பட வேண்டும்.
11) இதர தகுதிகள் இருப்பின் அதற்கான சான்று இணைக்கப்பட வேண்டும்.
12) ரூ.25/– மதிப்புள்ள அஞ்சல் வில்லை ஒட்டப்பட்ட, சுய விலாசம் இடப்பட்ட, ஒப்புதல் அட்டையுடன் கூடிய அஞ்சல் உறை இணைக்கப்பட வேண்டும்.

இதர விபரங்களை அலுவலக வேலை நேரங்களிலும் கீழ்க்கண்ட இணையத் தளத்திலும் தெரிந்து கொள்ளலாம்.

மாதிரி விண்ணப்பப் படிவம் இணைக்கப்பட்டுள்ளது.

1. www.samayapurammariammantemple.org
2. https://hrce.tn.gov.in

**சி. கல்யாணி. எம்.எல்.,**
**இணை ஆணையர் / செயல் அலுவலர்**

# அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், சமயபுரம்

## திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

## பணியாளர் நியமனத்திற்கான விண்ணப்ப படிவம்

புகைப்படம்

| வ. எண் | விபரம் | |
|---|---|---|
| 1. | விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் | |
| 2. | பெயர் | |
| 3. | தகப்பனார் பெயர் | |
| 4. | நிலையான முகவரி சான்றுடன் | |
| 5. | தொலைபேசி / கைபேசி எண். | |
| 6. | மின்னஞ்சல் முகவரி | |
| 7. | பிறந்த நாள் – வயது ( சான்று நகல் இணைக்கப்பட வேண்டும்) | |
| 8. | மதம் மற்றும் சாதி (சாதி சான்று நகல் இணைக்கப்பட வேண்டும்) | |
| 9. | கல்வி தகுதி, (கல்வி சான்று மற்றும் மாறுதல் சான்று நகல் இணைக்கப்பட வேண்டும் ) | |
| 10. | பதிவு பெற்ற மருத்துவரிடம் பெறப்பட்ட உடற்தகுதி சான்று இணைக்கப்பட வேண்டும். | |
| 11. | நன்னடத்தைச் சான்று<br>( A அல்லது B கிரேடு அலுவலர்கள் இருவரிடமிருந்து சான்று பெறப்பட வேண்டும்) | |
| 12. | முன் அனுபவச் சான்று நகல் இணைக்கப்பட வேண்டும். | |
| 13. | வாக்காளர் / ஆதார் அடையாள அட்டை நகல் | |
| 14. | இதர தகுதிகள் சான்று இணைக்கப்பட வேண்டும். | |

### உறுதி மொழி

திருக்கோயிலால் வெளியிடப்பட்டுள்ள வேலை வாய்ப்பு அறிவிப்பில் தெரிவிக்கப்பட்ட விதிமுறைகளை நான் நன்கு தெரிந்து கொண்டேன் எனவும், நான் இந்து மதத்தை சார்ந்தவர் என்றும், மேற்கூறிய விபரங்கள் அனைத்தும் உண்மையானவை எனவும் உறுதி அளிக்கின்றேன்.

இடம் :

நாள் :

விண்ணப்பதாரர் கையொப்பம்